மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'ரெட்டியார், என்று ஆரம்பித்தால், ஒவ்வொரு ஜாதியாக வரும். முதல் கேள்வியோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப் பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் அரசு சில நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், இந்த நன்மைகள் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச்சேரவேண்டுமென்ற காரணத் தால்தான் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். தாசில் தார் அவர்கள் முறையாக விசாரித்து அந்தச் சான்றிதழைத் தர வில்லையென்றால், முறையாக விசாரித்துத் தருவதற்கான ஏற் பாடுகளைச் செய்வதுதான்முறையே தவிர, அது அப்படி இருக்கிற காரணத்தாலே, பிறகு எம்.எல்.ஏக்கள், பிறகு எம்.பிக்கள், பிறகு வேறு யார் வேண்டுமானாலும் தரலாம் என்ற முறையைக் கொண்டு வருவது நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும். அது யாருக்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கிறோமோ, அவர்களுக்கு நிச்சயமாக அது பயன் அளிக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1980) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

5. அரசினர் தீர்மானம்

மதிப்பீட்டுக் குழு தேர்தல்

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 210—வது விதியின்கீழ், 1980-81—ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் ஒரு வெற்றிடத்தை நிரப்ப ஒரு உறுப்பினரை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.